


# சிருஷ்டிகரைத் தொழுதுகொள்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *சங் 115:1-8; உபா 10:17-22; சங் 101:1; ஏசா 1:10-17; ஏசா 58; மாற்கு 12:38-40.*

**மனன வசனம்:** அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக்கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். ஏசாயா 58:6,7.

எளியோர், ஒடுக்கப்பட்டோரை மோசமாக நடத்துவது குறித்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் எச்சரித்துவந்தார்கள். சுற்றிலுமிருந்த தேசத்தாரின் நடவடிக்கைகள் தேவகோபத்திற்கு ஏதுவாயிருந்தன. ஆமோஸ் 1,2. ஆனால், தேவனுடைய ஆசீர்வாதங்கள் பலவற்றைப் பெற்றிருந்த அவருடைய ஜனங்கள் அக்கிரமமாக நடந்தபோது தேவனும் அவருடைய தீர்க்கதரிசிகளும் மிகுந்த கோபமும் வருத்தமும் அடைந்தார்கள். இஸ்ரவேலரின் வரலாறும், தேவன் கொடுத்திருந்த சட்டங்களும் அவர்களை நல்வழியில் நடக்கச்செய்திருக்கவேண்டும். ஆனால், நிலைமை அப்படியில்லை என்பதே உண்மை.

ஆனால் நியாயம், அநியாயம் குறித்த கருத்துகள் பலவற்றை சிருஷ்டிப்புடன் சம்பந்தப்படுத்தி பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் கூறுகிறார்கள். மெய்யான தொழுகை என்பது பண்டிகையின்போது மட்டும் தொழுவது அல்ல. பிறர் நலன்குறித்து தேவன் சொல்லியிருக்கிறபடி வாழ்வதும், பின்தங்கியவர்கள்மேல் தேவன் சொன்னபடி அக்கறைகாட்டுவதும் மெய்தொழுகையே.

*2019, ஆகஸ்ட் 10 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு ஆகஸ்ட் 4

## சிலைவழிபாடும் ஒடுக்குதலும்

எகிப்திலிருந்து இஸ்ரவேலரை தேவன் விடுவித்து, சீனாய் மலைமேல் அவர்களைச் சந்தித்தார்; அங்கே பத்துக்கற்பனைகளை எழுதிக் கொடுத்தார். வேறு தேவர்களை வணங்கக்கூடாது, சிலைகளைச் செய்யக்கூடாது என்கிற முதல் இரு கற்பனைகளும் அவற்றில் அடங்கும். யாத் 20:2-6. தேவன் சொன்னபடியெல்லாம் செய்து, அவருடைய மக்களாக வாழ்வோமென மக்கள் சொன்னார்கள். யாத் 24:1-13.

பிறகு மோசே மலைக்கு ஏறிச்சென்று, கிட்டத்தட்ட ஆறு வாரங்கள் அங்கே இருந்தார்; அவருக்கு என்னவாயிற்றோவென மக்கள் நினைத்தார்கள். மக்கள் அழுத்தம்கொடுக்கவே, ஆரோன் ஒரு பொற்கன்றுகுட்டியைச் செய்து, அதற்குமுன்பாக மக்கள் பலியிடும்படிச் செய்தார்; பிறகு, 'ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்.' யாத்32:6. அவ்வளவு சீக்கிரத்தில் மக்கள் தேவனைவிட்டு சிலைவழிபாட்டிற்குத் திரும்பியதைக் கண்டு மோசே கொதித்தார்; தேவனும் எரிச்சலடைந்தார். மோசே அவர்களுக்காகப் பரிந்துபேசினதாலேயே அவர்கள் காக்கப்பட்டதுபோலத் தெரிந்தது. யாத் 32:30-34.

சிலைவழிபாட்டிற்குள் அடிக்கடி மக்கள் இழுக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் மற்றும் யூதா ராஜாக்களின் வரலாற்றில் பெரும்பாலும் இதை நாம் காணலாம். பொய்த்தெய்வங்களை வழிபடுவதற்காக மூர்க்கத்தனமான சடங்குகளைச் செய்தார்கள். எனவே, மக்களை மீண்டும் தம்மிடம் அழைப்பதற்காக தேவன் அனுப்பின தீர்க்கதரிசிகள் இந்தப் பாவத்தைக் கடிந்துகொண்டார்கள். எழுப்புதலையும் சீர்திருத்தத்தையும் வலியுறுத்தினபோது, தரித்திரரையும் எளியோரையும் ஆதரவற்றோரையும் நியாயமாக நடத்தும்படி வேண்டிக்கொண்டார்கள்.

**கேள்வி: சங்கீதம் 115:1-8இல் சங்கீதக்காரன் வலியுறுத்தும் கருத்து என்ன?**

எதை அல்லது யாரைத் தொழுகிறோமோ, அவைபோல நாம் மாறிவிடுகிறோம். எனவே தேவமக்கள் நீதியின் தேவனைவிட்டுவிட்டு, பொய்த்தெய்வங்களைத் தொழுதுகொள்ளத் திரும்பினபோது, பிறர்மேலான அக்கறையும், நியாயமான நடத்தையும் இயல்பாகவே குறைந்துபோனது. பிறதெய்வங்களைப் பின்பற்றினதால், பல விஷயங்களில் அவர்களுடைய மனநிலை மாறினது. மற்றவர்களை மோசமாக நடத்தியதும் அதில் ஒன்று. அவர்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்திருந்தால், எளியோர்மேல் தேவனுக்கிருந்த அதே அக்கறை அவர்களிலும் காணப்பட்டிருக்கும்.

நம்முடைய தொழுகை நம்மை மாற்றுகிறது என்பதுபற்றித் தியானியுங்கள். இந்த நியதி இன்று நம் வாழ்வில் எவ்வாறெல்லாம் வெளிப்படுகிறது?

# தொழுகைக்கான ஒரு காரணம்

தேவன் யார்? என்ன செய்திருக்கிறார்? அவருடைய சாற்றுப் பண்புகள் என்ன? ஏன் அவரைத் தொழவேண்டும்? மக்கள் தேவனைத் தொழுதுகொள்ளவற்கான காரணங்கள் வேதாகமம் முழுவதிலும் உள்ளன. அவர் நல்லவர், நியாயமுள்ளவர், இரக்கமுள்ளவர். நமக்காக அவர் என்ன செய்திருக்கிறார் (குறிப்பாக சிலுவையில்) என்பதையும், என்ன செய்வதாக வாக்குரைத்திருக்கிறார் என்பதையும் வேதாகமம் சொல்கிறது. நாம் ஒவ்வொருவரும் அவரைத் தொழுவதற்கு வலுவான காரணங்கள் உள்ளன.

**கேள்வி: தேவனைத் தொழவும், அவரைப் போற்றவும் நம்மை ஊக்குவிக்கவேண்டிய விஷயங்கள் யாவை? உபா 10:17-22; சங் 101:1; 146:5-10; ஏசா 5:16; 61:11.**

இத்தகைய சூழ்நிலைகளில் தேவமக்கள் தேவனைத் தொழுது கொண்டார்கள். எகிப்திலிருந்து விடுதலையடைந்திருந்த இஸ்ரவேலரின் சார்பில் தேவன் தலையிட்ட சமயங்களில் எல்லாம் இஸ்ரவேலர் மகிழ்ச்சியுடன் தொழுதுகொண்டார்கள். உதாரணமாக, செங்கடலைக் கடந்த சமயத்தில் தேவன் தங்களை விடுவித்ததை நினைத்து, மிரியாம் மற்றும் மோசேயின் தலைமையில் தேவனைத் துதித்து மக்கள் பாடினார்கள். யாத் 15.

அந்நேரங்களில் எல்லாம் தேவன் நியாயமுள்ளவராக இரக்கமுள்ளவராக நடந்துகொண்டார். அதை அவர்கள் மறந்திருக்கக்கூடாது. தங்கள் பின் சந்ததியாருக்கும் இச்சம்பவங்களைச் சொல்லிவந்தார்கள்; எனவே தேவனுடைய நீதி, இரக்கத்திற்காக பின்சந்ததியாரும் அவரைத் தொழுதுகொள்வது சாத்தியமாயிற்று. இவ்வாறு பின்சந்ததியாருக்குச் சொல்லி, அவர்களைத் தொழச்செய்வதற்கான ஓர் உதாரணத்தை உபா 10:17-22 இல் காணலாம்.

முதலாவது, தேவன் நியாயமுள்ளவர் என்பது அவருடைய குணத்தின் ஒரு முக்கிய அம்சம். 'தேவன் அநியாயஞ்செய்யாமலும், சர்வவல்லவர் நீதியைப் புரட்டாமலும் இருக்கிறது மெய்யே.' யோபு 34:12. தேவன் நியாயமுள்ளவர், நீதிதவறாதவர். அவரைத் தொழுது, போற்றவேண்டும்.

இரண்டாவது, தேவன் நியாயமுள்ளவர் என்பது தம் மக்களுக்காக, எளியோர் - ஒடுக்கப்பட்டோருக்காக அவர் நியாயத்தோடும் நீதியோடும் செயல்படுவதிலும் காணலாம். நியாயம் அவருடைய குணத்தின் ஓர் அம்சம் என்பது பேச்சளவில் மட்டுமல்ல. அவர் 'சிறுமையானவனுடைய கூக்குரலைக் கேட்கிறவர்.' யோபு 34:28. இன்று நம் உலகில் காணப்படும் தவறுகளைத் திருத்துகிறவர். தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்பிலும், புதிய பூமியின் சிருஷ்டிப்பிலும் இதை முற்றிலும் உணரலாம்.

இஸ்ரவேலர் தேவனைத் தொழுதுகொள்வதற்கு பல காரணங்கள் இருந்தன. சிலுவை அனுபவத்திற்குபின் வாழும் நமக்கு, அவரைத் தொழுதுகொள்வதற்கு எவ்வளவு பெரிய காரணம் இருக்கிறது?

# மத அடக்குமுறையாளர்கள்

யூதா, இஸ்ரவேல் ராஜ்யங்களில் மக்கள் தேவனிடம் திரும்பின சமயங்களில் தேவாலயத்திற்குச் சென்று, தேவனைத் தொழுதார்கள்; ஆனாலும், அந்தத் தொழுகையில் சிலைவழிபாட்டின் அம்சங்களும், சுற்றிலுமிருந்த தேசத்தாரின் மார்க்கங்களும் கலந்திருந்தன. அவர்கள் எவ்வளவுதான் பக்தியாக வாழ முயற்சித்தாலும், தினமும் தங்கள் வாழ்க்கையில் செய்துவந்த தீமைகளிலிருந்து அவர்களைத் திருப்ப அது போதுமானதாக இல்லையென தீர்க்கதரிசிகள் கூறினார்கள். தொழுகைச் சடங்குகள், பாடல்கள் மூலம் எவ்வளவுதான் பக்தியாக வாழ முயன்றபோதிலும், எளியோரின் கூக்குரல்களைப் போக்க அவை போதுமானவையாக இல்லை.

தன் காலத்து மக்களிடம், ‘‘தேசத்தில் சிறுமைப்பட்டவர்களை ஒழியப்பண்ண, எளியவர்களை விழுங்குகிறீர்கள்’’ என்று சொன்னார் ஆமோஸ். ஆமோஸ் 8:4. சடங்குக்கு ஆராதித்துவிட்டு, தங்கள் பண்டசாலைகளைத் திறக்கவும், ‘தரித்திரரைப் பணத்துக்கும், எளியவர்களை ஒருஜோடு பாதரட்சைக்கும் கொள்ளும்படிக்கும்’ அநியாயமாக வியாபாரம் செய்ய விரையவும் அவசரங்காட்டினார்கள். ஆமோஸ் 8:6.

**கேள்வி: இந்த மதப்பற்றாளர்களின் சடங்குகள்குறித்து ஆண்டவர் சொல்வது என்ன? ஏசா 1:10-17; ஆமோஸ் 5:21-24; மீகா 6:6-8.**

---

எளியோர், ஒடுக்கப்பட்டோர்மேல் அக்கறைகாட்டாமல் மக்கள் வெளிப்படுத்திய பக்தியையும் தொழுகையையும் கடுமையான வார்த்தைகளால் தம் தீர்க்கதரிசிகள்மூலம் தேவன் சாடுகிறார். தாம் அவர்களுடைய தொழுகையை ‘பகைத்து வெறுப்பதாகச்’ சொல்கிறார். ஆமோஸ் 5:21-24. அவர்கள் ஆசரிக்கக்கூடுவது தமக்கு ‘பிரியமல்ல’ என்றும், அவர்களுடைய காணிக்கையும் இசையும் அர்த்தமற்றவை என்றும் சொல்கிறார்.

எது சரியான தொழுகையாயிருக்கும் என்பதை அதிகமான, பரிகாசமான வார்த்தைகளால் மீகாவில் சுட்டிக்காட்டுகிறார். பலியா தேவை, அதிலும் ‘ஆயிரங்களான ஆட்டுக்கடாக்க(ளும்), எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளுமா’ தேவை என்று தீர்க்கதரிசி பரிகாசம் செய்கிறார். மீகா 6:7. பிறகு, தேவதயவையும் மன்னிப்பையும் பெறுவதற்கு அவர்கள் தங்கள் முதற்பேரானவர்களைப் பலியிட்ட கொடூரச்செயலையும் சுட்டிக்காட்டுகிறார்.

ஆனால் தேவன் உண்மையில் அவர்களிடம் எதிர்பார்த்ததை கடைசியில் சொல்கிறார்: ‘நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நட.’ மீகா 6:8.

உங்களைச் சுற்றிலுமுள்ள ஏழை எளியோருக்கு உதவுவதைவிட தொழுகைமுறைகளுக்கும் சடங்குகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்த குற்றத்தைச் செய்திருக்கிறீர்களா? அந்த அனுபவத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

# தொழுகைக்கான ஒரு வழி

தொழுகைக்கும் நியாயம்செய்வதற்கும் இடையேயுள்ள தொடர்பைச் சொல்லும்போது, இன்னொரு விஷயத்தையும் தீர்க்கதரிசிகள் வலியுறுத்துகிறார்கள். அதாவது, தரித்திரர் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் வேதனையைத் தணிப்பதும், எளியோருக்கு உதவுவதும்கூட தொழுகைதான். இதை வலியுறுத்துகிற ஓர் அதிகாரம் ஏசாயா 58.

**கேள்வி: ஏசாயா 58இல், தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையேயான உறவில் சிக்கலை ஏற்படுத்திய விஷயங்களாகச் சொல்லப்படுவது என்ன?**

பக்தியில் மூழ்கியிருந்தவர்கள்மேல்தான் இந்தக் கடுமையான விமர்சனங்கள் சுமத்தப்படுகின்றன. அவர்கள் தேவனைத் தேடுவதற்கு மும்முரமாக முயன்றார்கள், ஆனால் பயனில்லை. எனவே அவர்களின் தொழுகைமுறையில் மாற்றம் அவசியமென்றும், வித்தியாசமான தொழுகை அவசியமென்றும் தேவன் சொல்கிறார். அதாவது, 'அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதுமே' சரியான தொழுகை என்கிறார். ஏசா 58:6. பசியுள்ளோருக்கு ஆகாரங்கொடுக்கவும், துரத்துண்டவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கவும், எளியோருக்கு உதவிசெய்யவும் சொல்கிறார்.

இதுதான் தொழுகையென தேவன் சொல்லவில்லை. ஆனால் இதுவும் தொழுகையென்கிறார். பாரம்பரிய தொழுகைமுறையைவிட சிறந்ததென்கிறார். தொழுகை சுயநலநோக்கமுள்ளதாக இராமல், தேவனைத் தொழுதுகொள்கிற அனைவருக்கும் ஆசீர்வாதம் தரக்கூடியதாக இருக்கிறது. 'பாவப்பாரங்களிலிருந்து மனிதர்களை விடுதலைசெய்வதும், சகிப்பற்றதன்மையையும் ஒடுக்குதலையும் போக்குவதும், நியாயத்தையும் விடுதலையையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதும்தான் மார்க்கத்தின் மெய்யான நோக்கம்.' – *4SDABC, p 306.*

இப்படிப்பட்ட தொழுகைக்கான ஆசீர்வாதங்களை ஏசா 58:8-12இல் தேவன் வாக்குரைக்கிறார். அதாவது, மக்கள் தங்கள் சுயநலத்தைத் தேடாமல் இருந்தால், தேவன் அவர்கள்மூலம் செயல்படமுடியுமென்றும், அவர்கள்மூலம் குணமாக்குதலையும் புதுவாழ்வையும் கொண்டுவர முடியுமென்றும் சொல்கிறார்.

இப்படிப்பட்ட தொழுகை ஓய்வுநாளை 'மனமகிழ்ச்சியானதாக' மாற்றுகிறது. ஓய்வுநாளுக்கும் ஊழியத்திற்கும் இடையிலான தொடர்பை ஏற்கனவே பார்த்தோம். ஆனால் அர்த்தமுள்ள விதத்தில் தேவனைத் தொழுவதற்கும், தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கும், ஓய்வுநாளைக் கைக்கொள்வதும், ஊழியம்செய்வதும் எவ்வளவு முக்கியமென இந்த வசனங்கள் சொல்கின்றன.

'ஆண்டவருடைய ஓய்வு நாளைக் கைக்கொள்கிறவர்கள்மேல் இரக்கமும் தயாளமுமான சேவை செய்கிற பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது.'

## இரக்கமும் உண்மைத்தன்மையும்

இயேசுவின் காலத்து மதத்தலைவர்கள் சிலர், அவர் 'பாவிகளோடு' உட்கார்ந்து சாப்பிடுவதாக விமர்சித்தார்கள். அதற்கு இயேசு, 'பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்' என்று ஓசியா தீர்க்கதரிசி சொன்னதைச் சுட்டிக்காட்டி, அப்புத்தகத்திலிருந்து கற்றுக்கொள்ளும்படிச் சொன்னார். மத்தேயு 9:13; ஒப்பிடவும் ஓசியா 6:6.

பிறர்மேல் அக்கறைகொண்டு, இயேசு சேவைசெய்தார். இயேசுவைப் போல வாழ்வதே தேவன்மேல் மெய் அர்ப்பணிப்பு வைப்பதற்கான வழி; மற்றவர்களை அவர் நடத்தியவிதமும், குணமாக்குதலின் அற்புதங்களும், அவருடைய உவமைகள் பலவும் அதைச் சுட்டிக்காட்டின. மதத்தலைவர்கள்தாம் இயேசுவை மிகவும் விமர்சித்தார்கள்; இயேசுவின் கடுமையான விமர்சனத்திற்கும் ஆளானார்கள். ஏசாயா நாட்களின் மதவாதிகளைப்போல, தங்களுடைய சமயச்சடங்குகளால் தாங்கள் தேவனோடு விசேஷித்த உறவு வைத்திருந்ததாக நினைத்தார்கள்; ஆனால், தரித்திரரை அடக்கினார்கள்; எளியோரைப் புறக்கணித்தார்கள். அவர்களுடைய செயல்களுக்கும் தொழுகைக்கும் சம்பந்தமில்லை. அத்தகைய மாய்மாலத்தை இயேசு கடிந்துகொண்டார்.

**கேள்வி:** **மாற்கு 12:38-40இல் அவர்கள் 'விதவைகளின் வீடுகளைப் பட்சிப்பதாக' இயேசு சொல்வது சம்பந்தமற்ற பேச்சாக இருக்கிறதா? அல்லது, அதை வலியுறுத்ததான் இயேசு விரும்பினாரா? அவர்கள் ஏன் 'அதிக ஆக்கினையை அடைவார்கள்'?**

---

மதவாதிகளைக் குறித்த கடுமையான விமர்சனங்களை மத்தேயு 23இல் இயேசு சொல்லியிருக்கிறார். வாழ்க்கையில் பின்தங்கியோருக்கு அவர்களுடைய மார்க்கத்தால் பயனில்லையென்றும், அதிக பாரங்களையே சுமத்துகிறதென்றும் சொல்கிறார். அவர்கள் செய்கிறவையும், அல்லது செய்யத்தவறுபவையும், அவர்களின் அக்கறையின்மையும் 'மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுவதாக' இயேசு சொன்னார். மத் 23:13.

அவர்களுடைய மதநடவடிக்கைகளுக்கும், ஆதாயமடைவதற்காகச் செய்கிற அநியாயங்களுக்கும் சம்பந்தமே இல்லையென முற்காலத் தீர்க்கதரிசிகள்போல இயேசுவும் சொல்கிறார். 'மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்.' மத் 23:23. மதநடவடிக்கைகளிலும் ஆசரிப்புகளிலும் தவறில்லையென்பதை இயேசு ஒத்துக்கொள்கிறார்; ஆனால் பிறரை நியாயமாக நடத்தாமல் இவற்றைக் கைக்கொள்வதில் அர்த்தமில்லை என்கிறார்.

சத்தியத்தைப்பெற்றிருப்பதும் அறிந்திருப்பதுமே போதுமென்கிற கண்ணியில் சிக்கிக்கொள்ளாமல் தப்பித்துக்கொள்ள நாம் என்ன செய்யலாம்?

## மேலும் படிக்க:

'பல நூற்றாண்டுகளுக்குமுன் இஸ்ரவேலுக்குக் கொடுத்த ஆலோசனையையேமீண்டும்சொல்லி,பக்தியான வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினான் தீர்க்கதரிசி. ஒவ்வொரு காலக்கட்டத்திலும், சம்பிரதாயங்களில் சிக்கி, இரக்கம் காட்ட மறந்தோருக்கு இந்த ஆலோசனைகளையே யேகோவாவின் ஊழியர்கள் மீண்டும்மீண்டும் சொன்னார்கள்.' — *EGW, PK, pp 326,327.*

'ஏசாயா 58ம் அதிகாரத்தை மக்களிடம் குறிப்பிட்டுக் காட்டும்படி எனக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்த அதிகாரத்தை கவனமாக வாசித்து, சபைகளில் புத்துயிரைக் கொண்டுவரும் ஊழியம்பற்றி அறிந்துகொள்ளுங்கள். நம்முடைய உதாரக்குணம் மற்றும் பிரயாசங்களால் சுவிசேஷப்பணியைச் செய்யவேண்டும். கஷ்டத்திலிருக்கும் ஆத்துமாக்களைக் காணும்போது அவர்களுக்குக் கொடுங்கள். பசியோடிருப்பவர்களைச் சந்திக்கும்போது, ஆகாரங்கொடுங்கள். இவ்வாறு செய்யும்போது கிறிஸ்துவுக்கேற்ற ஊழியப்பணிகளைச் செய்கிறீர்கள். பிறருக்கு இரங்கிப் பணிசெய்வதே எஜமானின் பரிசுத்த பணியாக இருந்தது. அதில் பங்காற்றும்படி எங்குமுள்ள நம் மக்களை ஊக்குவிக்கவேண்டும்.' – *EGW, Welfare Ministry, p 29.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *நியாயம்செய்வதும், இரக்கம்காட்டுவதும்கூட தொழுகைதான் என்று எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா? மற்றவர்கள்மேல் அக்கறைகாட்டுவதற்கு இது எவ்வாறு உதவியாக இருக்கும்? தொழுகைகுறித்த கண்ணோட்டத்தில் இது எவ்வாறு ஒரு மாற்றத்தை உண்டுபண்ணமுடியும்?*

2 *கிறிஸ்தவர்களாக நம் தனிப்பட்ட வாழ்விலும், சபை வாழ்விலும் 'நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளை' புறக்கணியாமல் இருக்க நாம் என்ன செய்யலாம்? மத் 23:23. கொசுவில்லாதபடி வடிகட்டி, ஒட்டகம் விழுங்கிய அனுபவம் உங்களுக்கு உண்டா? மத் 23:24.*

3 *மாய்மாலம் எவ்வாறு பாவமாகும்? நல்லதுசெய்வதுபோலத் தெரிந்தால் போதாதா என்று வாழ்கிறது நல்லதா?*

4 *ஏழை எளியவர்கள்மேல் தேவன் எவ்வளவுக்கு அக்கறைவைத்திருக்கிறார் என்பது அவருடைய தீர்க்கதரிசிகள்மூலம் வெளிப்படுகிறது; இது உலகத்தை நீங்கள் பார்க்கிறவிதத்தில் என்ன மாற்றத்தை உண்டுபண்ணுகிறது? இன்றைய ஊடகச் செய்திகளை தீர்க்கதரிசிகளின் கண்களின் ஊடே பார்த்து, காதுகளின் ஊடே கேட்டால், நீங்கள் காண்கிறவிதத்திலும் கேட்கிறவிதத்திலும் அது எத்தகைய மாற்றத்தை உண்டுபண்ணும்?*

**பாடச்சுருக்கம்: தேவனை உரிமைபாராட்டி, அவரைத் தொழுதுகொண்டவர்கள் தீமை செய்தபோதுதான் தீர்க்கதரிசிகள் குறிப்பாகக் கடிந்துகொண்டார்கள். அநியாயம்செய்வது தொழுகைக்கு முரணானது என்றும், அது மாய்மாலமான மார்க்கமென்றும் இயேசுவும் தீர்க்கதரிசிகளும் கூறினார்கள். தேவன் விரும்புகிற மெய்யான தொழுகையில் ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவாகச் சேவைசெய்வதும், எளியோர்மேல் அக்கறை காட்டுவதும் அடங்கும்.**